

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், நத்தக்காடையூர் பில்டர்ஸ் பொறியியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு தொழில் நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் காங்கேயம் குழும கல்வி நிறுவனங்கள் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து, தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சாம் சாந்தகுமார், தலைவர், (ஈரோடு பில்டர் எஜுகேஷன் டிரஸ்ட், காங்கேயம் குரூப் ஆப் இன்ஸ்டிடியூஷன்), என்.ராமலிங்கம், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் சுரேஷ், மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணவேணி வரதராஜ் மாவட்டத்தின் தலைவர் ராசி கே.ஆர்.முத்துகுமார் உள்பட பலர் உள்ளனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டம், பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம், புதுப்பாளையம் அக்ரஹாரம், அதிமுக கிளை செயலாளர் செந்தில்குமார், புதுப்பாளையம் அக்ரஹாரம் ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் சந்திரா செந்தில்குமார் உட்பட 63 பேர் பள்ளிபாளையம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் இளங்கோவன் ஏற்பட்டில், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில், மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் அதிமுகவில் இருந்து விலகி திமுகவில் இணைந்தனர். அவர்களை மாவட்ட கழக செயலாளர் வரவேற்று சால்வை அணிவித்தார். சாதிக்பாட்சா, கார்த்திக்ராஜ், ரமேஷ், ராஜவேலு, பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# திருச்சி கோ-ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு விற்பனை!

## அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தார்!

திருச்சி, அக். 2-

தமிழக அரசின் கூட்டுறவு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் கடந்த 89 ஆண்டுகளாக தமிழக கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் ரகங்களை கொள்முதல் செய்து இந்தியா முழுவதும் உள்ள கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்து நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகையின் போது தமிழக அரசு வழங்கும் 30% சிறப்புத்தள்ளுபடி விற்பனை திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த சிறப்புத்தள்ளுபடி விற்பனைக்காக புதிய வடிவமைப்புடன் கூடிய கோவை மென்பட்டு புடவைகள், காஞ்சிபுரம், சேலம், ஆரணி, திருபுவனம் போன்ற பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகள், கோவை கோரா காட்டன் சேலைகள், கூறைநாடு புடவைகள் மேலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நெசவாளர்களின் கைவண்ணத்தில் உருவான பருத்தி சேலைகள், லினன் புடவைகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், வேஷ்டி, லுங்கி, துண்டு இரகங்கள், பருத்தி சட்டைகள், திரைச்சீலைகள், மிதியடிகள், நைட்டிஸ், மாப்பிள்ளை செட் மற்றும் ஏற்றுமதி ரகங்களை வழங்கி வருகிறது

இந்நிலையில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள பொதிகை கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி 2024 சிறப்பு தள்ளுபடி முதல் விற்பனையை நகரட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, துவக்கி வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார்.

திருச்சி பொதிகை விற்பனை நிலையத்தில் தீபாவளி 2023ல் ரூ.193.38 லட்சங்கள் விற்பனை செய்யப்பட்டது. தற்போது தீபாவளி 2024க்கு ரூ: 235.00 லட்சங்கள் விற்பனை இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. மேலும் கோஆப்டெக்ஸ் நிறுவனம், "கோ ஆப்டெக்ஸ் மாதாந்திர சேமிப்பு திட்டம்" என்ற சேமிப்பு திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இதன்படி 11 மாத சந்தா தொகை வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்டு, 12 வது மாத சந்தா தொகையை கோஆப்டெக்ஸ் செலுத்தி, மொத்த முதிர்வு தொகைக்கு தேவைப்படும் துணிகளை 30% அரசு தள்ளுபடியுடன் துணிகள் வழங்கப்பட்டு வருகிறது. கோஆப்டெக்ஸில் மின் வணிக விற்பனை நடைபெற்று வருகிறது. வாடிக்கையாளர்கள் www.cooptex.gov.in என்ற இணையதளத்தில் தங்களது விருப்பத்திற்கேற்ப ரகங்களை தேர்வு செய்து கொள்ளலாம்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், மாநகர மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் சரவணன், துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி,

மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர், விற்பனை மேலாளர் சங்கர், அரசு அலுவலர்கள், வாடிக்கையாளர்கள், பொது மக்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருவண்ணாமலை தெற்கு - வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்பு!

திருவண்ணாமலை, அக். 2 -

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இது குறித்து மாவட்ட திமுக அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் இன்று (02.10.2024 - புதன் கிழமை) மாலை 5.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு செயற்குழு கூட்டம் நடைபெறவுள்ளது.

செயற்குழு கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகிக்கிறார்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., வடக்கு மாவட்ட அவைத்தலைவர் ஆர்.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆலோசனைக் கூட்டத்தில், வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் சேர்த்தல் மற்றும் நீக்கல் குறித்தும், கழக ஆக்க பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

செயற்குழு கூட்டத்தில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில அணிகளின் நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்வாறு செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஈரோடு, கரூர், கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களின் இளைஞர் அணி அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் ஆய்வுக் கூட்டம் ஈரோடு மாவட்டம் பெருந்துறை வித்யா மந்திர் பள்ளியில் கழக இளைஞர் அணி துணை செயலாளரும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினருமான கே.இ.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலைஞர் படிப்பகம் அமைத்தல், இல்லந்தோறும் இளைஞர் அணி சேர்த்தல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




